அனுப்புநர்

M.காந்தி காமராஜ்,
த/பெ. மருதமுத்து
எண்.4/47, மாரியம்மன் கோவில் தெரு,
V.துறையூர், பள்ளிவிடை போஸ்ட்,
இலால்குடி வட்டம், திருச்சி மாவட்டம் 621112

தேதி : 18.12.2025
இடம் : திருச்சி

பெறுநர்

**உயர்திரு. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,**
**ஆட்சியர் அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி மாவட்டம்**

**பொருள் : மாடக்குடி ஊராட்சியில் பொதுமக்களுக்கான கோரிக்கையும் - புகார் மனுவும்.**

**********

அய்யா வணக்கம்

மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இலால்குடி வட்டம், **மாடக்குடி ஊராட்சியில் கோரிக்கை மனு.**

1. V.துறையூர் மாரியம்மன் கோவில் முதல் காளியம்மன் கோவில் வரை உள்ள தெருவிளக்கு நீண்ட நாட்களாக எரியவில்லை விளக்கு அமைத்து தர கோருதல்.
2. மாடக்குடி ஊராட்சியில் உள்ள அனைத்து குடிநீர் தேக்க தொட்டியை சுத்தம் செய்ய கோருதல், சுத்தம் செய்யாமல் அதற்கு உண்டான பணத்தை எடுத்து செலவு கணக்கில் மோசடி வேலை நடைபெற்றுள்ளது.
3. V.துறையூர் மாரியம்மன் கோவில் தெருவில் பெண்களுக்கான கழிப்பிட வசதி செய்து தர கோருதல்.
4. அனைத்து பகுதியிலும் தங்கு தடையின்றி குடிநீர் கிடைக்க வழிவகை செய்து தருதல்.

**<u>புகார் மனு.</u>**

1. V.துறையூர், பள்ளிவிடை, ஆகிய பகுதியில் உள்ள பாசன வாய்க்கால் சுத்தம் செய்ததாக தகவல் பலகை வைத்துள்ளனர். ஆனால் செய்யாத வேலைக்கு செய்ததாக போர்டு வைத்து பல லட்சம் ரூபாய் வங்கி கணக்கில் பணம் எடுக்கப்பட்டுள்ளது. அதை போன்று பைப் லைன் 2023 முதல் 2025 ஆண்டுக்கான ஒப்பந்தகாரர்கள் போலி ரசீது கொடுத்து செய்யாத வேலைக்கு செய்ததாக பணம் வழங்கப்பட்டுள்ள அந்த தொகையை ஒப்பந்தகாரரிடம் Recovery செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
2. 2021-2025ம் ஆண்டு மாடக்குடி ஊராட்சிக்கு உட்பட்ட வாசன் எஸ்டேட் பிளாட் அப்ருவல் வழங்கப்பட்டது. பஞ்சாயத்துக்கு எவ்வளவு ஏக்கர் ஒதுக்கப்பட்டது. அந்த இடம் எங்கே உள்ளது. அதில் பல்வேறு மோசடிகள் நடந்து உள்ளது. இதில் விரைவான விசாரணை மேற்கொண்டு முறைகேட்டில் ஈடுப்பட்டுள்ள நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

M. Gkamaraj
18/12/2025

அனுப்புநர்:

திரு.எஸ்.குமார்.,
உதவி இயக்குநர்(ஊராட்சிகள்(ம)தணிக்கை),
திருச்சிராப்பள்ளி(வடக்கு).

பெறுநர்:

வட்டார் வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
ஊராட்சி ஒன்றியம்,
இலால்குடி.

ந.க.எண். அ3/009/2026

நாள்:07 .01.2026

அய்யா,

பொருள்:- மனு- அடிப்படை வசதிகள்- திருச்சிராப்பள்ளி மாவட்டம்- இலால்குடி ஊராட்சி ஒன்றியம்- தெருவிளக்கு, குடிநீர்த்தொட்டி சுத்தம் செயதல்-தங்கு தடையின்றி குடிநீர் கிடைக்க வழிவகை செய்தல்- கழிப்பிட வசதி-செய்து தரக் கோரி மனு- உரிய நடவடிக்கை மேற்கொள்ளத் தெரிவித்தல் தொடர்பாக. தொடர்பாக.

பார்வை:- திரு.எம்.காந்தி காமராஜ், த/பெ. மருதமுத்து என்பவரது மனு நாள்: 18.12.2025

-----

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி ஊராட்சி ஒன்றியம், அடிப்படை வசதிகள் செய்து தருமாறு திரு.எம்.காந்தி காமராஜ் த/பெ மருதமுத்து, என்பவரிடமிருந்து வரப்பெற்ற மனு நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மேற்கண்ட மனுவிற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், அனுப்பி வைத்திடுமாறு இலால்குடி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) -க்கு தெரிவிக்கப்படுகிறது

இணைப்பு:மனுநகல்

ஒம்/-எஸ்.குமார்.,
உதவி இயக்குநர் (ஊ/த)(வ)
திருச்சிராப்பள்ளி.

//உத்தரவின்படி//

வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்)

07/01/26.

நகல்:

எம்.காந்தி காமராஜ்,
த/பெ.மருதமுத்து,
4/47 மாரியம்மன் கோவில் தெரு,
பள்ளி விடை (po)
V. துறையூர்.

**தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 6(1)ன் படி தகவல் கோருதல்**


**<u>பதிவுத்தபால் - ஒப்புதல் - அட்டையுடன்</u>**

அனுப்புநர்

M.காந்திகாமராஜ்,
த/பெ. மருதமுத்து,
எண்.4/47, மாரியம்மன் கோவில் தெரு,
V.துறையூர், பள்ளிவிடை,
இலால்குடி வட்டம், திருச்சி மாவட்டம் 621112
செல்:9750655197

தேதி : 19-01-2026
இடம் : திருச்சி.

<u>நீதிமன்ற வில்லை ஒட்டப்பட்டுள்ளது.</u>



பெறுநர்

உயர்திரு.பொது தகவல் அலுவலர் அவர்கள்,
ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,
பூவாளூர் இலால்குடி, திருச்சி மாவட்டம்

பொருள் : தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 6(1) ன் கீழ் தகவல் மற்றும் ஆவண தகவல் வேண்டுதல் - குறித்து.

***************

அய்யா,

1. 2025-2026 இந்த வருடத்தில் மாடக்குடி ஊராட்சியில் என்ன திட்டப்பணி செயல்படுத்தப்பட்டுள்ளது. அதன் மொத்த மதிப்பு தொகை எவ்வளவு என்று அதன் விபரம் தேவை?
2. 2025-2024 ஆண்டுக்கான அனைத்து A/c. வரவு - செலவு Statement வழங்கவும் மற்றும் தணிக்கை செய்த ஆய்வு அறிக்கை நகல் வழங்கவும்.
3. உயர்திரு. மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு, கடந்த மாதம் 18.12.2025ம் தேதியிட்ட மாடக்குடி ஊராட்சி குறித்து ரிஜிஸ்டர் தபால் மூலம் புகார் மனு அனுப்பியிருந்தேன். அந்த புகார் மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?
4. 2021-2025 ஆண்டில் மாடக்குடி ஊராட்சி நிர்வாகம் மீது புகார் பெறப்பட்டுள்ளதா? அந்த புகார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் தருக.

இந்த மனுவில் நீதிமன்ற வில்லை ஒட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட தகவல் அனைத்தும் சான்றளிக்கப்பட்ட நகலாக வழங்கவும். நகலுக்குண்டான கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

19/01/2026

**இணைப்பு:**

உயர்திரு. மாவட்ட ஆட்சியர், திருச்சி அவர்களுக்கு, அனுப்பிய மனு.

தேதி : 09-02-2026
இடம் : திருச்சி

அனுப்புநர்

M.காந்திகாமராஜ்,
எண்.4/47, மாரியம்மன் கோவில் தெரு,
V.துறையூர் பள்ளிவிடை போஸ்ட்,
இலால்குடி, திருச்சி

பெறுநர்

1) உயர்திரு. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,
2) உயர்திரு.இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் அவர்கள்
**மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,**
**திருச்சிராப்பள்ளி 620001**

ஐயா வணக்கம்

**இலால்குடி வட்டம், மாடக்குடி ஊராட்சி சம்மந்தமாக புகார் மனு.**

1. அனைத்து பகுதி மக்களுக்கும் குடிநீர், தெருவிளக்கு அமைக்க வேண்டுதல்.
2. பெண்களுக்கான கழிப்பிட வசதி செய்து தருதல்.
3. ஜனவரி 26, 2026 குடியரசு தினம் அன்று கிராம சபை கூட்டத்தில் வரவு-செலவு பொதுமக்களிடம் காட்டவும் இல்லை வசிக்கவும் இல்லை, இவ்ஊராட்சியில் பல்வேறு முறைகேடுகள் நடந்து உள்ளது. இந்த முறையகேட்டில் ஈடுப்பட்டுள்ள நபர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
4. குடிநீர் தொட்டி சுத்தம் செய்யப்படுவதில்லை, சுத்தம் செய்து தருதல் வேண்டுதல்.
5. ஊராட்சி செயலாளர் சரிவர அலுவலகத்திற்கு வருவதில்லை. அலுவலகம் மூடி கிடைக்கின்றது. அலுவலக பணிகள், மக்கள் பணிகள் முடங்கி கிடைக்கின்றது. நிர்வாகத்தில் பல்வேறு ஊழல், முறைகேடுகள் நடந்துள்ளது. பஞ்சாயத்துக்கு வரவேண்டிய வருவாய் தொகை வங்கி கணக்கில் காலதாமதமாக செலுத்தப்படுகிறது.
6. **ஊராட்சி செயலாளர் ஒரே அலுவலகத்தில் 5 வருடமாக பணியாற்றி வருகின்றார். முற்றிலும் சட்டத்திற்கு எதிரானது. இவரை உடனடியாக பணி மாறுதல் செய்ய வேண்டுகிறோம்.**
7. மாடக்குடி ஊராட்சி மன்ற தலைவர் பதவி முடிவடைந்து ஒரு வருடம் ஆகிறது. ஆனால் பஞ்சாயத்து அலுவலகத்தில் அவருடைய பெயர் இன்னும் அழிக்கப்படவில்லை. இதை அலுவலகத்தில் எழுதப்பட்டுள்ள தலைவர் பெயரை அழித்திட வேண்டுகிறோம்.
8. மேலும் பல்வேறு குற்றச்சாட்டுக்களில் ஈடுப்பட்டுள்ள மாடக்குடி ஊராட்சி செயலாளர் மீது நடவடிக்கை எடுக்கவும், அவரை பணி மாறுதல் செய்ய வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
M. [signature]

**நகல்கள்:**

உயர்திரு.வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள்,
இலால்குடி ஊராட்சி ஒன்றியம்,